தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.11.2013**

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 69.55 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 69.55 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,166 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறக்கப்படவில்லை. வாய்க்காலில் 3,897 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 10.77 டி.எம்.சி.

## நெல் கொள்முதல் மைய இடங்கள்: கோபி பகுதியில் அதிகாரிகள் ஆய்வு

கோபி பகுதியில் நெல் கொள்முதல் மையம் அமைக்கும் இடங்களில் அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தனர்.

கோபி மற்றும் சுற்றுப் பகுதியில் தடப்ள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால் மூலம் 25 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. கடந்த ஜூன் மாதம் 28 ஆம் தேதி பவானிசாகர் அணையிலிருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை ஆகிய 2 வாய்க்கால்களிலும் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது.

பாசன நீரை பயன்படுத்தி விவசாயிகள் தங்களது வயல்களில் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் ஆகிய பயிர்களை பயிரிட்டனர். தற்போது 4 மாதங்கள் முடிவடைந்த நிலையில், நெற்கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக உள்ளன. ஒருசில இடங்களில் நெல் அறுவடை பணிகள் துவங்கி விட்டன. ஆள்கள் பற்றாக்குறை காரணமாக இயந்திரங்கள் மூலமும் நெல் அறுவடை பணிகள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளதால் கோபி மற்றும் சுற்றுப் பகுதியில் பெய்யும் மழை காரணமாக, முற்றிய நெற்கதிர்கள் வயல்களிலேயே சாய்ந்து கிடக்கின்றன.

இந்நிலையில் அரசு சார்பில் கோபி உள்பட 12 இடங்களில் நெல் கொள்முதல் மையங்களை அமைக்க வேண்டும்; நெல்லில் உள்ள ஈரப்பதத்தின் அளவை 17 சதவீதம் முதல் 22 சதவீதம் வரை உயர்த்த வேண்டும் என கோபி பகுதி விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்திற்கு ஏற்கெனவே கோரிக்கை வைத்திருந்தனர்.

அதன் அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மண்டல மேலாளர் முருகானந்தம் தலைமையிலான குழுவினர் கோபி, கரட்டடிபாளையம், புதுவள்ளியாம்பாளையம், காசிபாளையம், கூகலூர், கள்ளிப்பட்டி, புதுக்கரைப்புதூர், டி.என்.பாளையம், அத்தாணி, பி.மேட்டுப்பாளையம், அய்யம்பாளையம், கவுந்தப்பாடி ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் மையங்கள் அமைக்கப்படும் இடங்களைப் பார்வையிட்டனர்.

இந்த ஆய்வின் போது விவசாயிகள் கள்ளிப்பட்டி ராமசாமி, வழக்குரைஞர் தளபதி, தனசீலன் ஆகியோர் உடனிருந்தனர்.

நுகர்பொருள் வாணிப கழக ஊழியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படும். விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் நெல் ரகங்களை பைகளில் கட்டுவதற்குத் தேவையான சணல் பைகள், கயிறு, அவற்றைத் தைப்பதற்கான இயந்திரம் என அனைத்தும் ஏற்பாடு செய்யப்படும். அதன் பின்னர் ஓரிரு நாள்களில் அரசு சார்பில் நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்படும் என வழக்குரைஞர் தளபதி கூறினார்.

**கோத்தகிரியில் தேயிலை விவசாயிகள் கருத்தரங்கு**

கோத்தகிரியில் இந்தியத் தேயிலை வாரியம் சார்பில் விவசாயிக ளுக்கான கருத்தரங்கு மற்றும் பயிற்சி நடைபெற்றது.

இந்தியத் தேயிலை வாரியம், உபாசி ஆகியவை இணைந்து சேலக்கொரை கிராமத்தில் நடத்திய இக் கருத்தரங்கிற்கு, ஊர்த் தலைவர் ராஜு தலைமை வகித்தார். விவசாயிகள் சங்கத் தலைவர் ரங்கசாமி, செயலர் கிருஷ்ணன் ஆகியோர்

முன்னிலை வகித்தனர். சுண்டட்டி மணி வரவேற்றார்.

இதில், தேயிலை வாரியத் தென்னிந்திய செயல் இயக்குநர் அம்பலவாணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில்,

சிறு விவசாயிகள் சங்கங்களாக இணைந்து தேயிலை வாரியத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும், விவசாயிகளின் குறைகளுக்கு 15 நாள்களில் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோல், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு 50 சதவீத மானியத்தில் கவாத்து செய்யும் இயந்திரம் மற்றும் தேயிலைப் பறிக்கும் இயந்திரம் வாரியத்தின் மூலம் வழங்கப்படும். பதிவு செய்யப்பட்ட அனைத்து விவசாயச் சங்கங்களுக்கும் தேயிலை வாரியத்தின் மூலம் 50 சதவீத மானியத்தில் வாகனங்கள் வழங்கப்படும். தேயிலை வாரியத்தின் மூலம் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

இக்கருத்தரங்கில், தேயிலை வாரிய வளர்ச்சி அதிகாரிகள் பி.பகலவன், மீரா, தேயிலை தொழிற்சாலை ஆலோசகர் பாரதிராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கடலோர மாவட்டங்களில் கனமழை நீடிக்கும்**

வங்கக்கடலில் உருவான குறைந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே இடத்தில் நீடித்து வருகிறது.

இதன் காரணமாக டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் வியாழக்கிழமை (நவ.6) கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழையின் தாக்கமாக மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அருகே கடந்த சில நாள்களுக்கு முன்பு குறைந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அது மேற்கு நோக்கி நகர்ந்து குமரிக் கடல் அருகே நிலைக் கொண்டுள்ளது.

குறைந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே இடத்தில் தற்போது நீடித்து வருவதாகவும், அதன் காரணமாக மழை தொடர்ந்து பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்னையைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. புதன்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

கும்பகோணம் - 110, ஆடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி - 90, திருவிடைமருதூர் - 80, சீர்காழி, மயிலாடுதுறை, பாபநாசம் - 70, அரியலூர் - 60, திருவாரூர் மாவட்டம் வலங்கைமான், கொள்ளிடம் - 50.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த இரு நாள்களாக காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 5,848 கன அடியாக இருந்த அணையின் நீர்வரத்து, புதன்கிழமை காலை நொடிக்கு 7,197 கன அடியாக அதிகரித்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 2,452 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால், புதன்கிழமை அணையின் நீர்மட்டம் 79.48 அடியாகவும், நீர் இருப்பு 41.44 டி.எம்.சி.யாகவும் இருந்தது. பாசனத்துக்கு திறந்து விடப்படும் நீரின் அளவைவிட, அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருப்பதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது.

**பழ மரக்கன்றுகள் நட, உரமிட உகந்த தருணம்**



மழை பெய்து வரும் தருணத்தில்தான் பழ மரக்கன்றுகள் நடவு செய்யவும், ஏற்கெனவே உள்ள மரங்களுக்கு உரமிட்டு பாரமரிக்கும் பணிகளை மேற்கொள்ளவும் வேண்டும் என தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து திருநெல்வேலி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

**எலுமிச்சை நடவு**

வரிசைக்கு வரிசை 5 மீ., செடிக்குச் செடி 5 மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இரண்டரை அடிக்கு இரண்டரை அடி என்ற அளவுகளில் எடுக்கப்பட்ட குழிகளி0ல் குழிக்கு 10 கிலோ தொழு உரம், 250 கிராம் வேப்பம் புண்ணாக்கு கலந்து நடவு செய்ய வேண்டும்.

உர நிர்வாகம்: ஒரு வயது மரத்துக்கு 10 கிலோ தொழு உரம், 450 கிராம் யூரியா, 600 கிராம் சூப்பர் பாஸ்பேட், 160 கிராம் பொட்டாஷ் ஆகிய உரங்களை இட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மரத்துக்கும் 5 கிலோ தொழு உரம், 220 கிராம் யூரியா, 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 70 கிராம் பொட்டாஷ் உரங்களை அதிகரித்துக் கொண்டே வர வேண்டும்.

ஆறாம் ஆண்டு முதல் ஒரு மரத்துக்கு 30 கிலோ தொழு உரம், 1350 கிராம் யூரியா, 1250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 500 கிராம் பொட்டாஷ் ஆகிய ரசாயன உரங்களை இட வேண்டும். யூரியாவை மட்டும் மார்ச், அக்டோபரில் பாதிப்பாதியாக பிரித்து வைக்க வேண்டும். இதர உரங்களை அக்டோபரில் இட வேண்டும்.

**நெல்லி நடவு**

வரிசைக்கு வரிசை 6 மீ., செடிக்குச் செடி 6 மீ. இடைவெளியில் நடவு செய்யலாம். 2-க்கு 2 அடி அளவுகளில் எடுக்கப்பட்ட குழிகளில் 10 கிலோ தொழு உரம், 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 1.3. சத லிண்டேன் குருணை 100 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட வேண்டும். ஒட்டு நெல்லிக் கன்றுகளை குழியின் நடுவில் நடவு செய்ய வேண்டும்.

உர நிர்வாகம்: நான்காமாண்டு காய்க்கத் தொடங்கியதும் ஆண்டுக்கு ஒரு மரத்துக்கு 50 கிலோ தொழு உரம், ஒன்றரை கிலோ யூரியா, ஒரு கிலோ சூப்பர் பாஸ்பேட், ஒரு கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இரு முறையாகப் பிரித்து இட வேண்டும். காய்களில் கரும்புள்ளிகளும், பழுப்பு நிறம் கலந்து காணப்படுவது போரான் சத்து பற்றாக்குறையாகும். இதைக் கட்டுப்படுத்த 100 லிட்டர் தண்ணீரில் 600 கிராம் போராக்ஸ் கலந்து ஒரு மாத இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும்.

**மா நடவு**

வரிசைக்கு வரிசை 7-10 செ.மீ, செடிக்குச் செடி 7-10 செ.மீ இடைவெளியில் நடவு செய்யலாம். அடர் நடவு முறையில் வரிசைக்கு வரிசை 5 மீ., செடிக்குச் செடி 5 மீ. இடைவெளியில் நடவு செய்யலாம். 3-க்கு 3அடி அளவுகளில் எடு0க்கப்பட்ட குழிகளில் 10 கிலோ தொழு உரம், 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 1.3 சத லிண்டேன் குருணை 100 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட்டு நடவு செய்ய வேண்டும். ஒட்டு மாங்கன்றுகளை குழியின் நடுவில் ஒட்டுப் பகுதி தரைமட்டத்திலிருந்து அரை அடி உயரத்தில் இருக்கும்படி நடவு செய்ய வேண்டும்.

உர நிர்வாகம்: முதலாமாண்டு ஒரு மரத்துக்கு 10 கிலோ தொழுஉரம், 450 கிராம் யூரியா, 1250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 500 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மரமொன்றுக்கு முந்தைய ஆண்டு உர அளவுடன் 10 கிலோ தொழுஉரம், 450 கிராம் யூரியா, 1250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 500 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களைக் கூடுதலாகச் சேர்த்து இட வேண்டும்.

ஆறாமாண்டு முதல் ஒரு மரத்துக்கு 50 கிலோ தொழு உரம், இரண்டே கால் கிலோ யூரியா, ஆறே கால் கிலோ சூப்பர் பாஸ்பேட், இரண்டரை கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். இந்த உரங்களை ஆண்டுக்கு இரு முறையாகப் பிரித்து இடலாம்.

**முந்திரி நடவு**

வரிசைக்கு, வரிசை 7 மீ., செடிக்குச் செடி 7 மீ. இடைவெளியில் நடவு செய்யலாம். 3-க்கு 3 அடிகளில் எடுக்கப்பட்ட குழிகளில் 10 கிலோ தொழு உரம், 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 1.3. சத லிண்டேன் குருணை 100 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட வேண்டும். ஒட்டு முந்திரிக் கன்றுகளை குழியின் நடுவில் நடவு செய்ய வேண்டும்.

உர நிர்வாகம்: முலாமாண்டு ஒரு மரத்துக்கு 10 கிலோ தொழுஉரம், 150 கிராம் யூரியா, 250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 100 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மரமொன்றுக்கு முந்தைய ஆண்டு உர அளவுடன் 10 கிலோ தொழுஉரம், 150 கிராம் யூரியா, 250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 100 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களைக் கூடுதலாகச் சேர்த்து இட வேண்டும்.

ஐந்தாமாண்டு முதல் ஒரு மரத்துக்கு 50 கிலோ தொழு உரம், ஒரு கிலோ யூரியா, ஒன்றே கால் கிலோ சூப்பர் பாஸ்பேட், அரை கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். இந்த உரங்களை ஆண்டுக்கு இருமுறையாகப் பிரித்து இடலாம்.

**கொய்யா நடவு**

வரிசைக்கு வரிசை 6 மீ., செடிக்குச் செடி 6 மீ. இடைவெளியில் நடவு செய்யலாம். ஒன்றரை அடிக்கு ஒன்றரை அடி அளவுகளில் எடுக்கப்பட்ட குழிகளில் 10 கிலோ தொழு உரம், 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 1.3 சத லிண்டேன் குருணை 50 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட வேண்டும். பதியன் கன்றுகளை குழியின் நடுவில் நடவு செய்ய வேண்டும்.

உர நிர்வாகம்: மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில் காய்க்கத் தொடங்கிய மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு 50 கிலோ தொழு உரம், இரண்டே கால் கிலோ யூரியா, ஆறே கால் கிலோ சூப்பர் பாஸ்பேட், ஒன்றே முக்கால் கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இரண்டாகப் பிரித்து இட வேண்டும்.

கொய்யாவில் மகசூலை மேம்படுத்த ஒரு சதம் யூரியா, அரை சதம் துத்தநாக சல்பேட் கலந்த கரைசலை மரங்களின் மேல் இலைவழி உணவாகத் தெளிக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் உள்ள தோட்டக்கலைத்துறை அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**சப்போட்டா நடவு**

வரிசைக்கு வரிசை 8 மீ., செடிக்குச் செடி 8 மீ. இடைவெளியில் நடவு செய்யலாம். அடர் நடவு முறையில் வரிசைக்கு வரிசை 8 மீ., செடிக்குச் செடி 4 மீ. இடைவெளியில் நடவு செய்யலாம்.

3-க்கு 3 அடி அளவுகளில் எடுக்கப்பட்ட குழிகளில் 10 கிலோ தொழு உரம், 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 1.3. சத லிண்டேன் குருணை 100 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட வேண்டும். ஒட்டுக் கன்றுகளை குழியின் நடுவில் நடவு செய்ய வேண்டும்.

உர நிர்வாகம்: முதலாமாண்டு ஒரு மரத்துக்கு 10 கிலோ தொழுஉரம், 450 கிராம் யூரியா, 1250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 500 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் மரமொன்றுக்கு முந்தைய ஆண்டு உர அளவுடன் 10 கிலோ தொழுஉரம், 450 கிராம் யூரியா, 1250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 500 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களைக் கூடுதலாகச் சேர்த்து இட வேண்டும்.

ஆறாமாண்டு முதல் ஒரு மரத்துக்கு 50 கிலோ தொழு உரம், இரண்டே கால் கிலோ யூரியா, ஆறே கால் கிலோ சூப்பர் பாஸ்பேட், இரண்டரை கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். இந்த உரங்களை ஆண்டுக்கு இரு முறையாகப் பிரித்து இடலாம்.

**கறவை மாடுகளுக்கு ஏற்படும் மடி நோய்: கட்டுப்படுத்தும் முறைகள்**



தமிழகத்தில் ஜெர்ஸி மற்றும் ஹோல்ஸ்டின் பிரிசியன் கலப்பின பசுக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன. இத்தகைய மாடுகள் அதிக பால் கொடுக்கும். நாட்டு பசுக்களைக் காட்டிலும் நோய் எதிர்ப்புத் திறன் குறைவாக இருப்பதால், தொற்று நோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றன. இதனால், மாடு வளர்ப்போர் நஷ்டம் அடைகின்றனர்.

இவற்றுக்கு வரக்கூடிய நோய்களில் மிகவும் முக்கியமானது மடி நோயாகும். இந் நோயால் ஆண்டுக்கு சுமார் ரூ. 6,010 கோடி விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என அறியப்பட்டுள்ளது.

இந் நோய் வராமல் தடுத்து மாடுகளைப் பாதுகாப்பது குறித்து, தேனி உழவர் பயிற்சி மையப் பேராசிரியர்கள் இரா. உமாராணி, நா.ஸ்ரீ. பாலாஜி மற்றும் அ. செந்தில்குமார் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மடிநோய்க்கான காரணங்கள்: நுண்ணுயிரி, நச்சுயிரி மற்றும் பூஞ்சைக் கிருமிகள் பால் உற்பத்தி செய்யும் சுரப்பு திசுக்களைப் பாதித்து, மடி நோயை உண்டாக்குகின்றன. இதில், பசுவின் மடி ஒரு பகுதி அல்லது அனைத்துப் பகுதிகளிலும் தாக்குதலுக்கு உள்ளாகுகின்றன. நோய்க் கிருமிகள் பசுவின் மடியில் பால் சுரப்பிகளைத் தாக்குவதால், பசு வளர்ப்பவர்களுக்கு பெரும் பொருள் சேதத்தையும் ஏற்படுத்துகின்றன. தரையின் சுத்தம், மடியின் சுத்தம், ரத்தம் மூலமாகவோ அல்லது காம்பின் துவாரத்தின் வழியாகவோ மடியை அடைந்து மடி நோய் ஏற்படுகிறது.

மேலும், மடியில் ஏற்படும் காயத்தின் மூலம் இந் நோய் பரவுகிறது. கறப்பவரின் சுத்தமற்ற கை மற்றும் மடிநோய் தாக்கிய மாட்டின் பாலை கறந்த பிறகு, மற்றொரு மாட்டின் பாலைக் கறக்கும்போது, இந் நோய் பரவுகிறது.

தவறான முறையில் பால் கறந்தாலும், அதாவது கட்டை விரலை மடக்கி பால் கறந்தாலும் மடி நோய் தாக்கும்.

மூன்று அல்லது நான்கு ஈத்துக்கு மேல் உள்ள மாடுகள், எளிதில் காயம் ஏற்படவுள்ள நீண்ட காம்புகள் மற்றும் தொங்கு மடியில் மடிநோய் தாக்குவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

பொதுவாக சுகாதாரமற்ற தரை மற்றும் கறந்தவுடன் மாடு தரையில் படுக்கும்போது அசுத்தமான தரை மூலம் மடிக்காம்பு துவாரம் வழியாக நுண்ணுயிரிகள் மடிக்குள் சென்று, பல்கிப் பெருகி மடி நோயை உண்டாக்கும்.

நோயின் அறிகுறிகள்: நோய் பாதிக்கப்பட்ட மடியின் பாகம் பெரிதாகி, வீங்கி சிவந்தும் காணப்படும். பொதுவாக ஒன்று அல்லது இரண்டு காம்புப் பகுதிகள் பாதிக்கப்படுகின்றன. வீக்கமும், மடி சூடாகவும், தொட்டால் மாட்டுக்கு மிகவும் வலியும் ஏற்படும். எனவே, மாடு மடியை தொட விடாது உதைக்கும். பாதிக்கப்பட்ட காம்பில் மற்ற காம்புகளை விட பாலின் அளவு குறைவாக இருக்கும். பால் திரியாகவும், மஞ்சள் நிறமாகவும், ரத்தம் கலந்தும், சீழ் கலந்தும் வரும். நோயின் தன்மை அதிகரித்து விட்ட நிலையில், மடியின் பாகம் கெட்டியாக மாறி, பால் சுரக்கும் தன்மையை முழுவதுமாக இழந்து விடும்.

சிகிச்சை முறைகள்: மடிநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து மருத்துவம் செய்யாவிட்டால், மடியின் பால் சுரப்பி நிரந்தரமாகக் கெட்டு, பால் சுரக்கும் தன்மையை பசு இழந்துவிடும். பின்னர், பாதிக்கப்பட்ட மடியைக் குணப்படுத்துவது இயலாத காரியமாகி விடும். எனவே, நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் பாதிக்கப்பட்ட மாட்டைப் பிரித்து, கால்நடை மருத்துவரின் மூலம் நுண்ணுயிர்க் கொல்லி மருந்தினைப் பயன்படுத்தி குணப்படுத்தலாம்.

தடுப்பு முறைகள்: தொழுவத்தை எப்போதும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அயொடொபார், சோடியம் ஹைப்போ குளோரைட்,

குளோர்ஹெக்சிடின் போன்ற கிருமி நாசினி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். பால் கறப்பதற்கு முன், கறப்பவர்கள் தங்களது கைகளை சோப்பு அல்லது கிருமி நாசினி போட்டு கழுவிய பின்னரே கறக்க வேண்டும்.

பால் கறப்பதற்கு முன்பும், பின்பும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் என்ற அளவில் கலக்கப்பட்ட தண்ணீரில் மடியை நன்கு கழுவ வேண்டும். பால் கறக்கும் இயந்திரத்தை சுத்தம் செய்து வைக்க வேண்டும். கறவை நேரத்தை ஒழுங்காகக் கடைபிடிக்க வேண்டும். மடியில் பால் தேங்கக் கூடாது. பாலை முற்றிலும் கறந்து விட வேண்டும். சினை மாட்டின் மடியை தினமும் கண்காணிக்க வேண்டும்.

கறவை காலம் முடிந்தவுடன், கால்நடை மருத்துவர் உதவியுடன் காம்புக்குள் நுண்ணுயிர்க் கொல்லி மருந்தைச் செலுத்த வேண்டும். நோயுற்ற பசுவை இறுதியில் பால் கறக்க வேண்டும். மேலும், நோயுற்ற காம்பை இறுதியில் கறக்க வேண்டும். கறந்த பாலை கிருமி நாசினி மருந்து கலந்து அப்புறப்படுத்த வேண்டும். அடிக்கடி மடிநோய் தாக்கும் மாடுகளை, பண்ணையில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

மடியில்லையேல் வருமானம் இல்லை. எனவே, கறவை மாடுகள் வளர்ப்பின் மூலம் அதிக லாபம் பெற மடி நோயை வராமல் தடுக்க வேண்டியது மிகவும் அவசியம். நோய் வந்த பின் மருத்துவம் செய்து காப்பாற்றுவதைக் காட்டிலும், மடி நோய் வராமல் இருக்க வேண்டிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, மாடுகளைப் பராமரித்து வருவதே சாலச் சிறந்தது என்றனர்.

இதுகுறித்து மேலும் தகவல் பெற விரும்புவர்கள், தேனி உழவர் பயிற்சி மையம் 04546-260047 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.11.2013**

## முள்ளங்கிக்கு விலை இல்லை

கொடைக்கானல்: கொடைக்கானலில் முள்ளங்கிக்கு உரிய விலை கிடைக்காததால், செலவழித்த தொகையை கூட பெற முடியவில்லை என, விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கொடைக்கானல் குறிஞ்சி நகரைச் சேர்ந்த விவசாயி ராஜா கூறியதாவது: முள்ளங்கி பயிரிட்டோம். தென்மேற்குப் பருவமழை ஓரளவே பெய்தது. இருந்தாலும் ஓடை நீரை சிரமப்பட்டு பாய்ச்சினோம். அதன் விளைவாக 70 நாட்களில் நல்ல விளைச்சல் கிடைத்தது. மதுரையில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு முள்ளங்கிகளை லாரிகளில் அனுப்புகிறோம். கிலோவிற்கு 5 ரூபாய்தான் தருகின்றனர். ஆனால், வெளிமார்க்கெட்டில் முள்ளங்கி கிலோ 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது. உரம், கூலி என நிறைய செலவு செய்து, பாடுபட்டு பயிரிட்ட எங்களுக்கு உரிய விலை கிடைக்காததால், ஏமாற்றம் அடைந்துள்ளோம், என்றார்.

## விளைச்சல் சரிவு எதிரொலி உச்சத்தில் சிறிய வெங்காயம்

ராமநாதபுரம் : விளைச்சல் சரிவால் சிறிய வெங்காயத்தின் விலை மீண்டும் உச்சத்தை தொட்டுள்ளது. சிறிய வெங்காயம் தீபாவளிக்கு முன் கிலோ ரூ.110 வரை இருந்தது. ஆனால், பண்டிகை முடிந்த பிறகும் விலை வீழ்ச்சி அடையவில்லை. உழவர் சந்தையில் சிறிய வெங்காயம் கிலோ ரூ.90, வாரசந்தையில் ரூ.100. உழவர் சந்தையில் பெரிய வெங்காயம் கிலோ ரூ. 60, வாரச்சந்தையில் ரூ.50 என, விற்கப்படுகிறது.

காந்தியன் (பரமக்குடி):

தென் மாவட்டங்களில் நடக்கும் அனைத்து வாரச்சந்தைகளிலும் வெங்காயம் வியாபாரம் செய்கிறேன். இந்தாண்டு துவக்கம் முதல் சிறிய வெங்காயத்தின் விலை ஏறுமுகமாக உள்ளது. தற்போது, சிறிய வெங்காயம் கிலோ ரூ.100, பெரிய வெங்காயம் ரூ.50 என, விற்கிறேன். விளைச்சல் சரிவு, போதிய வரத்து இன்மையால் விலை உச்சத்தை தொட்டுள்ளது. வாரம் ஆயிரம் கிலோ விற்ற நிலை மாறி 50 கிலோ விற்றால் அதிகம்' என்றார்.

## மலையில் தொடர் மழையால் விவசாயிகள்...நிம்மதி! வனவிலங்குகளின் குடிநீர் பிரச்னைக்கு தீர்வு

கோபிசெட்டிபாளையம்: குன்றி உள்ளிட்ட மலைப்பகுதிகளில் பெய்யும் தொடர் மழையால், குண்டேரிப்பள்ளம் அணைக்கு வன விலங்குகள் தண்ணீர் குடிக்க வருவது நின்று விட்டதால், விவசாயிகள் நிம்மதியடைந்துள்ளனர்.
கோபியை அடுத்த கொங்கர்பாளையத்தில் குன்றி மலை அடிவாரத்தில் குண்டேரிப்பள்ளம் அணை உள்ளது. இதன் மூலம் கொங்கர்பாளையம், வாணிப்புத்தூர் உள்ளிட்ட பகுதியில், 2,800 ஏக்கர் பாசன வசதியை பெறுகிறது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான குன்றி, கெம்பனூர், விலாங்கோம்பை, மல்லிய துருவம் மற்றும் இஞ்சி கிடங்கு ஆகிய பகுதிகளில், கடந்த சில நாட்களாக தொ டர்ந்து மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக, குண்டேரிப்பள்ளம் ஆற்றில் தொடர்ந்து தண்ணீர் வரத்தாகிறது.
குண்டேரிப்பள்ளம் அணையின் மொத்த கொள்ளளவு, 42 அடியாகும். ஆற்றில் தண்ணீர் வரத்தாகி கொண்டிருப்பதால், தற்போது அணையின் நீர்மட்டம், 37 அடி வரை உயர்ந்துள்ளது. குண்டேரிப்பள்ளம் அணையில் ஜிலேபி, கெழுத்தி, மிர்க்கால் ஆகிய மீன் வளர்க்கப்படுகிறது. தினமும், 200 முதல், 250 கிலோ மீன் பிடிக்கப்பட்டது. கடந்த சில நாட்களாக பெய்யும் மூடு பனி, மழையால், மீன் பிடிக்கும் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.
குண்டேரிப்பள்ளம் நீர்பிடிப்பு மலைப்பகுதிகளில் யானை, கரடி, காட்டெருமை மற்றும் மான் போன்ற விலங்குகள் அதிகளவில் வாழ்ந்து வருகிறது.
விளாங்கோம்பை ஆற்றுப்பகுதியில் வன விலங்குகள் தண்ணீர் குடித்து செல்லும்.

கடந்த சில மாதங்களுக்கு முன் சரியான மழை இன்றி, நீர் நிலைகள் வறண்டு விட்டதால், தண்ணீருக்காக குண்டேரிப்பள்ளம் அணையை வன விலங்குகள் நம்பியிருந்தன. காலை, மாலை, இரவு நேரத்தில் யானை, காட்டெருமைகள் கூட்டம் கூட்டமாக அணைக்கு வந்து தண்ணீர் குடித்து சென்றன. தண்ணீருக்காக வரும் வனவிலங்குகள், அருகில் உள்ள வயல்களில் புகுந்து சேதப்படுத்தியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். 20க்கும் மேற்பட்ட விவசாயிகள், பொதுமக்கள், வன விலங்குகள் தாக்கி பலியானார்கள்.

இந்நிலையில், வனப்பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழையால், வனப்பகுதியில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நிற்கிறது. குண்டேரிபள்ளம் அணைக்கு வன விலங்குகள் வரத்தாவது நின்று விட்டது. வனப்பகுதியில் அதிக அளவில் பசுமை ஏற்பட்டதுடன், தடுப்பணை, வனத்துறையின் தொட்டிகளில் தண்ணீர் தேங்கி கிடப்பதால், விலங்குகளுக்கு தண்ணீர், உணவு ஆகியவற்றுக்கு வழி கிடைத்துள்ளதால், இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் நிம்மதியடைந்துள்ளனர்.

## பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பதால் கோட்டாமுறை : நொந்து போகும் சிறு விவசாயிகள்

மஞ்சூர் : பசுந்தேயிலைக்கான கோட்டா முறை தொடர்வதால் தொழிற்சாலை அங்கத்தினர்கள் நொந்து போயுள்ளனர்.

மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் மஞ்சூர், பிக்கட்டி, எடக்காடு, மேற்குநாடு, இத்தலார் உள்ளிட்ட 8 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. சமீப காலமாக, கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் தனியாருக்கு இணையாக, பசுந்தேயிலைக்கு நல்ல விலை வழங்கி வருகின்றன. இதனால், பெரும்பாலான அங்கத்தினர்கள் தங்களது தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலை முழுவதையும் கூட்டுறவு தொழிற்சாலைக்கு வினியோகிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், பரவலாக பெய்து வரும் நல்ல மழையால், தேயிலை வரத்து படிப்படியாக அதிகரித்தது. பசுந்தேயிலைக்கு நல்ல விலை கிடைத்து வருவதால், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர். தொழிற்சாலைகளுக்கான கொள்

முதல் அதிகரித்த காரணத்தால் தேயிலை உற்பத்தி மேற்கொள்வதில், அதன் நிர்வாகங்கள் திணறும் நிலை ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து, தொழிற்சாலை நிர்வாகம் சார்பில், "கோட்டா' முறை அமல்படுத்தப்பட்டது. இதனால், அங்கத்தினர்களிடம் இருந்து, குறிப்பிட்ட அளவு மட்டுமே தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறது. கோட்டா முறை, பெரும்பாலான கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் சில வாரங்களாக தொடர்வதால், அங்கத்தினர்கள் தங்களது தேயிலை தோட்டத்தில் உள்ள பசுந்தேயிலையை குறிப்பிட்ட நாளில் பறிக்க முடியாமல் அவதியடைந்து வருகின்றனர்.

பசுந்தேயிலை பறிப்பதற்கும் போதிய ஆட்கள் கிடைக்காததால், இவர்களின் பணிகள் பாதிப்படையும் சூழல் ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக, தேயிலை தோட்டங்களில் பல லட்சம் கிலோ பசுந்தேயிலை பறிக்கப்படாமல் வீணாகும் சூழ்நிலை உள்ளது.

கூட்டுறவு தொழிற்சாலை அங்கத்தினர் ரமேஷ் கூறுகையில்,

""மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு, அங்கு கூடுதல் டிரையர், நவீன இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், கோட்டா முறை படிப்படியாக தவிர்க்கப்படும் என கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பே தொழிற்சாலைகளின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். இருந்த போதிலும் தொழிற்சாலை நிர்வாகத்தினர் கோட்டா முறையை கடைப்பிடிக்கின்றனர். தற்போது, ஒரு மாதமாக கோட்டா முறை தொடர்வதால், சிறு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, கோட்டை முறையை அகற்ற உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

## கரூர் வட்டாரத்தில் மழை: மகிழ்ச்சியில் விவசாயிகள்

கரூர்: வடகிழக்கு பருவமழை கரூர் மாவட்டத்தில் பெய்ய துவங்கியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஒரே நாளில் கரூர் மாவட்டத்தில் 71.80

மி.மீ., மழை பெய்துள்ளது.

கரூர் மாவட்டத்தில் கடந்தாண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. நடப்பாண்டு ஜூன் மாத துவக்கத்தில் பெய்ய வேண்டிய தென் மேற்கு பருவமழையும் விவசாயிகளை ஏமாற்றியது.

ஆனால், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியான கர்நாடகாவிலும், அமராவதி நீர்ப்பிடிப்பு பகுதியான கேரளா விலும் மழை பெய்ததால், மேட்டூர் அணை மற்றும் அமராவதி அணைக்கு அதிகளவில் தண்ணீர் வந்தது. இதையடுத்து, மேட்டூர் அணை, அமராவதி அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், கரூர் மாவட்டத்தை சேர்ந்த காவிரி மற்றும் அமராவதி ஆற்றுநீர் பாசன பகுதிகளில் சாகுபடி பணிகள் ஓரளவுக்கு துவங்கியுள்ளது.

ஆனால், நடப்பாண்டும் கரூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பெய்யாததால், மானாவாரி நிலங்களை சேர்ந்த விவசாயிகள் பெரும் கவலையில் இருந்தனர். மேலும், கரூர் மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக கோடையை மிஞ்சும் அளவுக்கு வெயில் சுட்டெரித்தது. பெரும்பாலான மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.

கரூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு, 8.30 மணி முதல் பரவலாக மழை பெய்தது. அதிகப்பட்சமாக பஞ்சப்பட்டியில், 28.60 மீ. மீ., மழை பெய்தது. நேற்று காலை, 8 மணி வரை கரூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு (மி.மீ) அரவக்குறிச்சி, 1.60, குளித்தலை, 5, மாயனூர், 1.60, அணைப்பாளையம், 6, தோகமலை, 11, பாலவிடுதி, 10.20, கிருஷ்ணராயபுரம், 2.30 ஆகிய அளவுகளில் மழை பதிவாகியுள்ளது. கரூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளதால், மானா வாரி நிலங்களில் எண்ணை வித்துக்கள் சாகுபடி செய்யப்படும் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## பருத்தியில் உற்பத்தி தொழில் நுட்ப பயிற்சி: அதிகாரி அழைப்பு

பெரம்பலூர்: பெரம்பலூர் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் வெளியிட்ட அறிக்கை:

பெரம்பலூர் மாவட்டம் வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல்

மையம் சார்பில், வரும் 11ம் தேதி காலை ,10 மணிக்கு பருத்திக்கான மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட உள்ளது.

இந்த பயிற்சியில் உரமிடுதல், நீர் நிர்வாகம், நோய் மற்றும் பூச்சி நிர்வாகம் ஆகியவை குறித்து வீடியோ கான்ஃபரன்சிங் மற்றும் செயல்விளக்கங்கள் மூலம் விளக்கம் அளிக்கப்படும்.

பயிற்சியில் பங்குபெற விரும்பும் விவசாயிகள் நேரில் அல்லது, 04328-293251, 293592, 89390-03569 ஆகிய நம்பரில் தொடர்பு கொண்டு தங்களது பெயர்களை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

## வாழை மரங்களில் வாடல் நோய் தாக்கியதால் கலக்கம் : விவசாயிகளுக்கு பயிற்சி வழங்க வேண்டும்

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் பல இடங்களில் வாழை பயிரில் வாடல் நோய் தாக்கியுள்ளதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். விவசாயிகளுக்கு முறையான பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்க வேளாண் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்டத்தில் வாழை, கரும்பு மற்றும் மரவள்ளி போன்ற ஆண்டிற்கு ஒருமுறை அறுவடை செய்யும் பயிர் சாகுபடியில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இந்த வகை பயிர்களில் விவசாயிகளுக்கு ஆட்கள் தேவை குறைந்து, கூடுதல் லாபம் கிடைப்பதால் பல விவசாயிகளும் விரும்பி பயிர் செய்து வருகின்றனர்.

வாடல் நோய்

மாவட்டத்தில் கோலியனூர், காணை மற்றும் கண்டமங்கலம் ஒன்றிய பகுதிகளில் ஆயிரம் ஏக்கருக்கு மேல், சமையலுக்கு பயன்படும் மொந்தன் ரக வாழைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தற்போது 6 முதல் 8 மாதங்கள் வரையுள்ள பல தோட்டங்களில், பியூசேரியம் வாடல் நோயின் தாக்கம் அதிகம் உள்ளது. இந்த நோய் வாழை கட்டைகள் நடவு செய்து, வளர்ந்து 5 மாதங்கள் ஆன கன்றுகளில் காண முடியும்.

இந்த வாடல் நோய் தாக்கிய வாழை கன்றுகளில் அடி இலையின்

ஓரங்கள் மஞ்சளாக காணப்படும். நாளைடைவில் இலைகள் முழுவதும் மஞ்சள் நிறமாக மாறும். வாடல் நோய் பாதித்த இலைகள், இலை காம்பு பகுதியில் ஒடிந்து, தண்டை சுற்றி தொங்குகின்றன. இந்த நோய் பாதித்த வாழையின் பக்க இலைகள் அனைத்தும் பாதித்த பின், மரத்தின் உச்சியில் உள்ள இலைகள் மேல்நோக்கி விரைப்பாக காணப்படும். இதனால் மரத்தின் வளர்ச்சி குன்றி ஈட்டி போன்று காட்சியளிக்கும்.

இந்த நோய் பாதிக்கப்பட்ட மரங்கள் இறப்பதற்கு முன், அதிக பக்க கிளைகளை உருவாக்கும். மேலும் இந்த மரத்தில் தார்கள் வருவதில்லை. ஒரு சில மரங்களில் சிறிய காய்களுடன் கூடிய தார்கள் வந்தாலும், அவை எதற்கும் பயன்படுத்த முடியாது.

விவசாயிகள் பாதிப்பு

இதனால் மாவட்டத்தில் விவசாயிகள், பல ஆயிரம் ரூபாய் செலவு செய்தும் பயன் இல்லாமல், கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மண்ணில் வாழும் இந்த பூஞ்சையானது, எல்லா சூழலையும் தாங்கி 30 ஆண்டுகள் வரை தொடர்ந்து வாழும். விதை கன்றுகள், கிழங்குகள், மண்வெட்டி, கடப்பாறை போன்று விவசாய உபகரணங்கள் மூலமும் பரவு
கிறது.

வாழை தோட்டத்தில் 2 நாட்களுக்கு மேல் தண்ணீர் தேங்கி நின்றாலும் இந்த நோய் பரவும். இந்நோயை கட்டுப்படுத்த, தொடர்ந்து வாழை பயிர் செய்வதை தவிர்த்து கரும்பு, நெல் போன்ற மாற்று பயிர்களை சாகுபடி செய்யலாம். வாடல் நோய் தாக்காத தோட்டங்களிலிருந்து கன்றுகளை எடுத்து வந்து புதிதாக நடவு செய்ய வேண்டும்.

வாடல் நோய் காணப்படும் வயல்களில் மக்கிய தொழு உரம், மண்புழு உரம் மற்றும் நெல் உமியின் சாம்பல் பயன்படுத்தலாம். இந்நோய் இருந்தால், வாழை மரங்களுக்கு கார்பன்டாசிம் அல்லது புரோப்பிகோனசோல் மருந்துகளை தெளித்து நோயை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் கூறினார்.

பயிற்சி தேவை

நோய் கட்டுப்படுத்தும் முறை எவ்வளவு
இருந்தாலும், வரும் முன் காப்பதே சிறந்தது. எனவே வாழை சாகுபடி செய்யவுள்ள விவசாயிகளுக்கு துவக்கத்திலேயே வேளாண் துறை அதிகா
ரிகள் பயிர் பாதுகாப்பு குறித்து பயிற்சி வழங்க வேண்டும். விதை கன்றுகள் வாங்குதலை தவிர்த்து வேளாண் துறை மூலமே வாழைக் கன்றுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## தென்னையில் ஊடு பயிராக சவுக்கை, பச்சை பயறு சாகுபடி

விழுப்புரம் : சிறுவந்தாடு கிராமத்தில், தென்னங்கன்றுகள் இடையே ஊடு பயிராக சவுக்கை, பச்சை பயறும் சாகுபடி பணியில் ஓய்வு பெற்ற கால்நடை மருத்துவர் ஈடுபட்டுள்ளார்.
விழுப்புரம் அடுத்த சிறுவந்தாடு கிராமம் ஓய்வு பெற்ற கால்நடை மருத்துவர் சண்முகம். தனது 4 ஏக்கர் நிலத்தில் 2 மாதங்களுக்கு முன் தென்னங்கன்றுகள் நடவு செய்து, வனத்துறை மூலம் வழங்கிய சவுக்கை கன்றுகளையும் நடவு செய்து பராமரித்து வருகிறார்.
ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தில் இரண்டரை ஏக்கர் நிலத்தில், 25 அடி இடை வெளியில் தென்னங் கன்றுகள் நட்டுள்ளார். ஊடு பயிராக சவுக்கைக் கன்றுகள் நட்டு, பச்சை பயறும் விதைத்துள்ளார்.அவர்
கூறியதாவது:தென்னங்கன்றுகளுக்கு இடையே மூன்றரை அடி அகலம், இரண்டடி நீளம் இடைவெளியில், சவுக்கைக் கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. வனத்துறை மூலம் வழங்கிய தேக்கு மரக் கன்றுகள், வரப்பை சுற்றி நட்டுள்ளேன். சவுக்கை நடவு முடிந்தவுடன், பச்சை பயறு விதைக்கப்படும். பச்சை பயறு செடிகள் வளர்ந்ததும், ஏக்கருக்கு 4 கிலோ வீதம் டி.ஏ.பி.,யை 10 லிட்டர் தண்ணீரில், ஒரு நாள் முழுவதும் ஊர வைத்து, கரைத்து, கரைசலை வடிகட்டி 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, கைத்தெளிப்பான் மூலம் பச்சை பயறு செடிகளுக்குத் தெளிக்கப்படும். இதன் சத்துகள் பச்சை பயறு செடிகள் மட்டுமின்றி, சவுக்கு மற்றும் தென்னங் கன்றுகளுக்கும் கிடைக்கும்.

மூன்றரை மாதங்கள் கழிந்தவுடன், பச்சை பயறு அறுவடை செய்யப்படும். பின், பவர் வீடர் மூலம் வயலில் குறுக்கு, நெடுக்காக உழவு செய்து, களைகளை மண்ணில் மக்கச் செய்வதால், சிறந்த இயற்கை சத்துகளாக கிடைக்கிறது.
பச்சை பயறு அறுவடை மூலம் கிடைக்கும் பணம், மொத்த சாகுபடி பணிகளுக்கும் செலவு செய்த தொகைக்கு, ஈடு கொடுத்து விடும். பின், இரண்டரை ஆண்டு முதல் மூன்றாண்டிற்குள் சவுக்கை மரங்கள் அறுவடை செய்யப்படும்.
டிராக்டர் மூலம் உழவு செய்து, தென்னங்கன்றுகள் மற்றும் தேக்கு மரங்கள் பராமரிப்பு செய்யப்படும். இதில் நடவு செய்யப்பட்டுள்ள நெட்டை மற்றும் குட்டை ரக கலப்பின தென்னங் கன்றுகள், ஐந்தாம் ஆண்டு முதல் காய்க்கத் துவங்கும்.இவ்வாறு அவர் கூறினார்.

## சின்னசேலம் பகுதியில் மணிலா செடி செழிப்பு

சின்னசேலம் : சின்னசேலம் தாலுகாவில் உள்ள கிராமங்களில் 1000க்கும் மேற்பட்ட கிராமங்களில் மணிலா தண்ணீர் இறைப்பு பயிராகவும், மானாவாரியாகவும் பயிரிடப்பட்டுள்ளது. மூன்று மாத பயிரான மணிலா கடந்த ஜூலை மாதத்தில் விதை விதைக்கப்பட்டது. ஜிப்சம், பாக்டம்பாஸ், யூரியா உள்ளிட்ட உரங்களை பயன்படுத்தினர். மாதத்திற்கு 2 தண்ணீர் இறைக்க வேண்டும். தொடர்ந்து மழை பெய்வதால் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயராக உள் ளது. ஏக்கருக்கு 25 முதல் 30 மூட்டை வரை லாபம் கிடைக்கும். அனைத்து செலவு போக ஏக்கருக்கு 25-30 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.
குறைந்த தண்ணீர், அதிக லாபம் காரணங்களால் விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்.

## யூரியா இறக்குமதி 40 சதவீதம் குறையும்

புதுடில்லி: உள்நாட்டில் யூரியாவிற்கான தேவை குறைந்துள்ளதால், நடப்பு நிதியாண்டில், அதன் இறக்குமதி, 40 சதவீதம் குறைந்து, 45–50 லட்சம் டன்னாக குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து, உர அமைச்சக அதிகாரி ஒருவர் கூறியதாவது:சென்ற 2012–13ம் நிதியாண்டில், 80 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டது. நடப்பு 2013–14ம் நிதியாண்டில், இதுவரை, 40 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தற்போது, யூரியாவிற்கான தேவை குறைந்துள்ளது. மேலும், 15 லட்சம் டன் யூரியா கையிருப்பில் உள்ளது. அதனால், யூரியாவை இறக்குமதி செய்யும் திட்டமில்லை. ஆகவே, நடப்பு நிதியாண்டில், ஒட்டுமொத்த அளவில், யூரியா இறக்குமதி, 45 அல்லது 50 லட்சம் டன்னாக இருக்கும்.

யூரியா இறக்குமதியில், தனியாரை அனுமதிக்கும் திட்டம் எதுவும் அரசுக்கு இல்லை. தற்போது, பொதுத்துறையை சேர்ந்த, எம்.எம்.டி.சி., இந்தியன் பொட்டாஷ், ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்கள் மட்டுமே யூரியா இறக்குமதியை மேற்கொள்கின்றன.இறக்குமதி செய்யப்பட்ட யூரியாவை, முகமை அமைப்புகளிடம் இருந்து தனியார் நிறுவனங்கள் வாங்குகின்றன.

இந்தியாவில், ஆண்டுக்கு, 3 கோடி டன் யூரியா தேவைப்படுகிறது. ஆனால், உள் நாட்டில், 2.20 கோடி டன் என்ற அளவிற்கே, யூரியா உற்பத்தி செய்யப்படுகிறது. இறக்குமதி மூலம் பற்றாக்குறை சமாளிக்கப்படுகிறது.விவசாயிகளுக்கு, மானிய விலையில், ஒரு டன் யூரியா, 5,360 ரூபாய்க்கு, விற்கப்படுகிறது. உற்பத்தி மற்றும் வினியோகச் செலவினத்திற்கும், விற்பனை விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகை, மானியமாக வழங்கப்படுகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.11.2013**

## வேளாண் விளைபொருள் சேமிப்பு 1.50 கோடி டன் இருப்பு வைக்கும் குளிர்சாதன கிடங்கு வசதி தேவை



ஐதராபாத் : இந்தியாவில் காய்கறிகள் உள்பட வேளாண் விளை பொருட்கள் 1.50 கோடி டன் அளவுக்கு இருப்பு வைக்க குளிர்சாதன வசதியுடைய கிடங்குகள் தேவை. தனியார் துறையினர் முதலீடு செய்து இந்த தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்று மத்திய உணவு பதப்படுத்தும் துறை அமைச்சகத்தின் செயலாளர் சிராஜ் ஹுசைன் தெரிவித்தார்.

உலக வேளாண் அமைப்பின் சார்பில் ஐதாராபாத்தில் 3 நாள் மாநாடு நடைபெறுகிறது. நேற்று முன்தினம் துவங்கிய மாநாட்டின் ஒருபகுதியாக, Ôஉணவு 360Õ என்ற 2 நாள் சர்வதேச கருத்தரங்கம் மற்றும் வேளாண் விளைபொருள், உணவு பதப்படுத்துதல் கண்காட்சி நேற்று தொடங்கியது.

இதில் பங்கேற்க வந்த மத்திய உணவு பதப்படுத்தும் துறை அமைச்சகத்தின் செயலாளர் சிராஜ் ஹுசைன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: 2010ம் ஆண்டு நிலவரப்படி, நாட்டில் சுமார் 25 மில்லியன் டன்

அளவுக்கு வேளாண் விளைபொருட்களை இருப்பு வைக்க குளிர்சாதன கிடங்குகள் வசதி உள்ளது. ஆனால், சுமார் 61 மில்லியன் டன்கள் அளவுக்கு இருப்பு வைக்கும் குளிர்சாதன வசதி கிடங்குகள் தேவை. எனவே இரண்டுக்கும் வித்தியாசம் 36 மில்லியன் டன்கள்.

கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 10 மில்லியன் டன்கள் அளவுக்கு இருப்பு வைக்கும் கிடங்குகள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே தற்போதைய தேவை 26 மில்லியன் டன்கள் இருப்பு வைக்கும் வசதியுடைய குளிர்சாதன கிடங்குகள்தான். தேவையை கணக்கிட்ட முறையில் ஏற்பட்டுள்ள குறைபாடு காரணமாக உண்மை தேவை சுமார் 15 மில்லியன் டன்கள் இருப்பு வைக்கக்கூடிய கிடங்குகள்தான்.

இந்தத் துறையில் அரசின் மானிய உதவியை எதிர்பார்க்காமல், தனியார் அதிக அளவில் முதலீடு செய்து குளிர்சாதன வசதியுடைய கிடங்குகளை அமைக்க வேண்டும்.
அப்படி உருவாக்கிவிட்டால், நாட்டில் வேளாண் விளைபொருட்கள் இருப்பு வைக்க சிறந்த நெட்வொர்க் கிடைத்துவிடும். வேளாண் விளைபொருட்கள் விலை உயர்வை கட்டுப்படுத்துவதோடு, விவசாயிகளுக்கும், இந்தத் தொழிலில் ஈடுபடுவோருக்கும் நியாயமான வருமானம் கிடைக்கும்.

மாநிலங்களுக்கு இடையே தொழிற்சாலை உற்பத்தி பொருட்கள் கொண்டு செல்ல கட்டுப்பாடுகள் இல்லாததது போல், வேளாண் விளைபொருட்களையும் கொண்டு செல்ல கட்டுப்பாடுகள் இருக்காது. விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது என்றும் தெரிவித்தார்.

**தமிழகம், கேரளாவில் விளைச்சல் பாதிப்பு தேங்காய் எண்ணெய் டின்னுக்கு ரூ.80 அதிகரிப்பு**



சேலம் : தமிழகம் மற்றும் கேரளாவில் தேங்காய் விளைச்சல் குறைந்தால் 15 கிலோ கொண்ட தேங்காய் எண்ணெய் டின்னுக்கு ரூ.80 வரை விலை உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் பாமாயில் எண்ணெய் வரத்து அதிகரித்துள்ளதால் லிட்டருக்கு ரூ.3 விலை குறைந்துள்ளது. சேலம் செவ்வாய்பேட்டையை சேர்ந்த எண்ணெய் வியாபாரிகள் கூறியதாவது: கேரளா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தேங்காய் எண்ணெய்யையும், உத்தரபிரதேசம், கல்கத்தா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நல்லெண்ணெய், மலேசியாவில் இருந்து பாமாயில் அதிகளவில் சேலம் செவ்வாய்பேட்டைக்கு கொண்டு வரப்படுகிறது.

தேங்காய் எண்ணெய் அரவை ஆலைகளில் எண்ணெய் உற்பத்தி குறைந்ததால் மார்க்கெட்டுக்கும் வரத்து குறைந்தது. இதனால் 15 கிலோ கொண்ட டின் ரூ.80 வரை விலை உயர்ந்துள்ளது. கடந்த ஒரு வாரத்திற்கு முன் ரூ.1850 என விற்பனை செய்யப்பட்ட 15 கிலோ கொண்ட தேங்காய் எண்ணெய் தற்போது ரூ.1930 என விற்கப்படுகிறது.

மலேசியாவில் இருந்து பாமாயில் வரத்து அதிகரித்துள்ளதால் ரூ.67க்கு விற்ற ஒரு கிலோ பாமாயில் ரூ.64 எனவும், நல்லெண்ணெய் ரூ.2600 எனவும், வனஸ்பதி ரூ.1150 முதல் ரூ.1900 எனவும், ரீபைண்டு ஆயில் ரூ.1800 எனவும், கடலை எண்ணெய் ரூ.1600 எனவும் விற்பனை செய்யப்படுகிறது.

**எதிர்பார்த்த விற்பனை இல்லை கறிக்கோழி கொள்முதல் விலை 40 ரூபாயாக சரிந்தது**



ஈரோடு : தமிழகம் முழுவதும் 25 ஆயிரம் கறிக்கோழி பண்ணைகள் மூலம் தினந்தோறும் 8 லட்சம் கறிக்கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும், கேரளா, கர்நாடகா மாநிலங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. குறிப்பாக பல்லடம், பொங்கலூர், உடுமலை, மடத்துக்குளம், பொள்ளாச்சி, பெருந்துறை, விஜயமங்கலம், முத்தூர், வெள்ளகோவில், அவிநாசி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் கறிக்கோழி பண்ணைகள் இயங்கி வருகின்றன. கறிக்கோழியின் விலை தினந்தோறும் பல்லடம் பிராய்லர் கோ ஆர்டினேஷன் கமிட்டி (பிசிசி.,) மூலம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

தீபாவளிக்கு ஒருவாரம் முன்பு வரை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோ கறிக்கோழியின் விலை ரூ.67 ஆக இருந்தது. தீபாவளி சமயத்தில் கறிக்கோழியின் விலை ரூ.60 ஆக இருந்த போதிலும் எதிர்பார்த்த அளவிற்கு கறிக்கோழியின் விற்பனை இல்லை.

கறிக்கோழி நுகர்வு பெரிதும் குறைந்துள்ளதால் விலை படிப்படியாக குறைந்து கடந்த 2 நாட்களாக ஒரு கிலோ கறிக்கோழியின் விலை ரூ.40 ஆக குறைந்து விட்டது.

ஒரு கிலோ கறிக்கோழியை உற்பத்தி செய்ய ரூ.68 ஆகிறது. இந்நிலையில் தீபாவளி சமயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கறிக்கோழிகள் பெரிதும்

தேக்கமடைந்து விட்டதால் பண்ணை கொள்முதல் விலை கடும் சரிவடைந்துள்ளது.

விலை வீழ்ச்சிக்கான காரணம் குறித்து பிசிசி., நிர்வாகத்தினர் கூறுகையில், ஒரு கிலோ கறிக்கோழியின் உற்பத்தி விலை ரூ.68 ஆகும் நிலை யில் கறிக்கோழி நுகர்வு குறைந்து விட்டதால் தற்போது ரூ.40 வீதம் பண்ணை கொள்முதல் விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பல சிக்கன் ஸ்டால்களில் பண்ணை கொள்முதல் விலை குறைந்தாலும் ஒரு கிலோ சிக்கன் விலை ரூ.120 முதல் ரூ.150க்கு தான் விற்கிறார்கள்.
பண்ணை கொள்முதல் விலை குறையும் போது விற்கப்படும் சிக்கன் கடைகளில் சிக்கன் விலையை குறைத்தால் விற்பனை அதிகரிக்கும். பண்ணை கொள்முதல் விலை குறையும் போது சிக்கன் கடைகளில் சிக்கன் விலையை குறைக்காமல் பழைய விலைக்கே விற்கும் கடைக்காரர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு பிசிசி., நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

எக்ஸ்ட்ரா தகவல்

நாமக்கல் பகுதியில் 1,100 பண்ணைகளில் மொத்தம் 4.50 கோடி முட்டை கோழிகள் உள்ளன. இதில் தினமும் 3.50 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

**வெங்காய விலை தொடர்ந்து உருளை கிழங்கின் விலையும் உயர்ந்தது...**



புதுடெல்லி: வெங்காயத்தை தொடர்ந்து காய்கறிகளின் அரசன் என்று அழைக்கப்படும் உருளைக் கிழங்கின் விலையும் அதிகரிக்க தொடங்கியுள்ளதால் வாடிக்கையாளர்கள் செய்வதறியாது திகைத்துள்ளனர். அத்தியாவசிய பொருளான வெங்காயத்தின் விலை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு கடந்த வாரத்தில் 100 ரூபாயை எட்டியது. இதனைத் தொடர்ந்து வெங்காய பதுக்கலை தடுக்குமாறு மாநில அரசுகளை வலியுறுத்திய மத்திய அரசு வெங்காயத்தின் இறக்குமதியை அதிகபடுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

டெல்லி, ராஜஸ்தான் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் வெங்காயத்தின் விலை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அரசியல் கட்சிகள் கதிகலங்கி போய் உள்ளன. இந்நிலையில் வெங்காயத்தை தொடர்ந்து அன்றாட பயன்பாட்டிற்கு தேவைப்படும்  உருளைக்கிழங்கின் விலையும் உயர்ந்துள்ளதால் வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

விலை அதிகரிப்பை காரணம் காட்டி உருளை கிழங்கை அண்டை மாநிலங்களுக்கு அனுப்புவதை மேற்குவங்க அரசு முற்றிலும் நிறுத்தி உள்ளதாக வியாபாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர். மேற்கு வங்கத்தில் இருந்து வரத்து குறைந்து உள்ளதால் ஜார்கண்ட், பீகார், ஒடிசா உள்ளிட்ட மாவட்டங்களில் உருளை கிழங்குக்கு தட்டுபாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.

ஏற்கனவே வெங்காயத்தின் விலை கண்ணீரை வர வைத்த நிலையில் தற்போது உருளை கிழங்கின் விலையும் அதிகரிக்க தொடங்கியுள்ளதால் இல்லத்தரசிகள் விழிபிதுங்கி உள்ளனர்.

**16 அடி உயரம் வளர்ந்த கத்திரிக்காய் மரங்கள்**

தும்கூர்: கர்நாடகாவில் கத்திரிக்காய் மரத்தில் காய்க்கும் அதிசயம் நடக்கிறது.கத்திரிக்காய் செடிகள் 2 அடி முதல் 3 அடி வரை செடியாக வளர்ந்து காய்கள் காய்க்கும். குறிப்பிட்ட காலத்துக்குள் கத்திரிக்காய் பறிக்கப்பட்டு பின்னர்,

செடிகளை வேரோடு அகற்றிவிடுவதுதான் வழக்கம். ஆனால், வடகர்நாடகா மாவட்டம், சிரசி தாலுகாவில் வழக்கத்துக்கு மாறான அதிசயம் நிகழ்ந்துள்ளது. இங்குள்ள முண்டகூடா கிராமத்தை சேர்ந்தவர் சசி. இவர் தனது நண்பரின் நிலத்தில் விதைத்திருந்த கத்திரிக்காய் செடிகளை 8 ஆண்டுகளுக்கு முன் கொண்டு வந்து தனது வீட்டு தோட்டத்தில் பயிரிட்டார்.

வழக்கமான உயரம் வளர்ந்த இந்த செடிகளில் எப்போதும் போல் கத்திரிக்காய் காய்த்தது. பின்னர், இந்த செடிகள் மரம் போல் வளர்ந்தன. தற்போது, இந்த செடிகள் 16 அடிக்குமேல் வளர்ந்து மரமாக காட்சி அளிக்கின்றன. செடியாக இருந்து காய்க்க வேண்டிய கத்திரி செடிகள், மரமாக மாறியிருப்பது முண்டகூடா கிராமத்தில் உள்ள மக்களை மட்டுமின்றி சுற்று வட்டார கிராம மக்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.